ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
SRI LANKA RAILWAYS
இலங்கை புகையிரத சேவைகள்

## திித்வா”சூறாவளியினால் சேதமடைந்த வடக்கு புகையிரதப் பாதையை புனரமைத்த பின்னர் 2026/04/09 முதல் யாழ்ப்பாணம்/காங்கேசன்துறை வரை மீண்டும் புகையிரத சேவைகளை ஆரம்பித்தல்.

“தித்வா” சூறாவளி காரணமாக வடக்கு புகையிரதப் பாதையின் 14 இடங்களுக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டிருந்தன. இவ்விடங்களை தற்காலிகமாக சீர்செய்த பின்னர், 2025/12/24 முதல் புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதன்போது கொழும்பு கோட்டை மற்றும் யாழ்ப்பாணத்திற்கு இடையிலான புகையிரத சேவைகள் குறைந்த வேகத்தில் முன்னெடுக்கப்பட்டன. “தித்வா” சூறாவளியினால் சேதமடைந்த அந்த 14 இடங்களின் நிரந்தர புனரமைப்புப் பணிகளுக்காக, மீண்டும் 2026/01/19 முதல் வடக்கு புகையிரதப் பாதையின் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இப்பணிகள் இந்திய அரசாங்கத்தின் 05 மில்லியன் டொலர் மானிய உதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

“தித்வா” சூறாவளியினால் சேதமடைந்த 14 இடங்களின் புனரமைப்புப் பணிகள் மற்றும் மஹவ - ஓமந்தை வீதி நவீனமயமாக்கலுக்கு அமைய அமைக்கப்பட்டிருக்க வேண்டிய 05 பாலங்கள் மற்றும் “காசிக்கோட்டை” யானை சுரங்கப்பாதை பணிகள் என்பன நிறைவடைந்ததைத் தொடர்ந்து, 2026/04/09 முதல் பின்வரும் வகையில் வடக்கு புகையிரதப் பாதையில் சேவைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நகரிடை (Intercity) புகையிரதம் மற்றும் யாழ்ப்பாணம் இரவு நேர தபால் புகையிரதம் ஆகியன 2026/04/09 முதலும், யாழ் தேவி புகையிரதம் 2026/04/10 முதலும் தினசரி சேவையில் ஈடுபடத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த புகையிரதங்கள் நிறுத்தப்படும் சில பிரதான புகையிரத நிலையங்களின் புறப்படும் நேரங்கள் பின்வருமாறு:

[1] யாழ்ப்பாணம் நகரிடை புகையிரதம்

| | Mount Lavinia - Kankesanthurai<br>கல்கிசை – காங்கேசன்துறை | | Kankesanthurai - Mount Lavinia<br>காங்கேசன்துறை – கல்கிசை | |
|---|---|---|---|---|
| | Railway Station<br>புகையிரத நிலையம் | Departure Time<br>புறப்படும் நேரம் | Railway Station<br>புகையிரத நிலையம் | Departure Time<br>புறப்படும் நேரம் |
| 1 | Mount Lavinia<br>கல்கிசை | 05.15 a.m. | Kankesanthuraiகாங்கே<br>சன்துறை | 01.50 p.m. |
| 2 | Colombo Fort<br>கொழும்பு கோட்டை | 05.45 a.m. | Jaffna<br>யாழ்ப்பாணம் | 02.15 p.m. |
| 3 | Anuradhapura<br>அனுராதபுரம் | 09.25 a.m. | Vavuniya<br>வவுனியா | 04.05 p.m. |
| 4 | Vavuniya<br>வவுனியா | 10.04 a.m. | Anuradhapura<br>அனுராதபுரம் | 05.00 p.m. |
| 5 | Jaffna<br>யாழ்ப்பாணம் | 11.56 a.m. | Colombo Fort<br>கொழும்பு கோட்டை | 08.34 p.m. |
| 6 | Kankesanthurai<br>காங்கேசன்துறை | 12.14 p.m. | Mount Lavinia<br>கல்கிசை | 09.15 p.m. |

ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
SRI LANKA RAILWAYS
இலங்கை புகையிரத சேவைகள்

[2] யாழ் தேவி புகையிரதம்

| | Colombo Fort - Kankesanthurai<br>கொழும்பு கோட்டை – காங்கேசன்துறை | | Kankesanthurai - Colombo Fort<br>காங்கேசன்துறை –<br>கொழும்பு கோட்டை | |
|---|---|---|---|---|
| | Railway Station<br>புகையிரத நிலையம் | Departure Time<br>புறப்படும் நேரம் | Railway Station<br>புகையிரத நிலையம் | Departure Time<br>புறப்படும் நேரம் |
| 1 | Colombo Fort<br>கொழும்பு கோட்டை | 06.40 a.m. | Kankesanthurai<br>காங்கேசன்துறை | 10.30 a.m. |
| 2 | Anuradhapura<br>அனுராதபுரம் | 10.51 a.m. | Jaffna<br>யாழ்ப்பாணம் | 11.00 a.m. |
| 3 | Vavuniya<br>வவுனியா | 11.39 a.m. | Vavuniya<br>வவுனியா | 01.36 p.m. |
| 4 | Jaffna<br>யாழ்ப்பாணம் | 02.10 p.m. | Anuradhapura<br>அனுராதபுரம் | 02.40 p.m. |
| 5 | Kankesanthurai<br>காங்கேசன்துறை | 02.33 p.m. | Colombo Fort<br>கொழும்பு கோட்டை | 07.03 p.m. |

[3] யாழ்ப்பாணம் இரவு நேர தபால் புகையிரதம்

| | Moratuwa - Kankesanthurai<br>மொறட்டுவ – காங்கேசன்துறை | | Kankesanthurai - Moratuwa<br>காங்கேசன்துறை –மொறட்டுவ | |
|---|---|---|---|---|
| | Railway Station<br>புகையிரத நிலையம் | Departure Time<br>புறப்படும் நேரம் | Railway Station<br>புகையிரத நிலையம் | Departure Time<br>புறப்படும் நேரம் |
| 1 | Moratuwa<br>மொறட்டுவ | 06.55 p.m. | Kankesanthurai<br>காங்கேசன்துறை | 08.00 p.m. |
| 2 | ColomboFort<br>கொழும்பு கோட்டை | 08.00 p.m. | Jaffna<br>யாழ்ப்பாணம் | 08.35 p.m. |
| 3 | Anuradhapura<br>அனுராதபுரம் | 00.05 a.m. | Vavuniya<br>வவுனியா | 11.15 p.m. |
| 4 | Vavuniya<br>வவுனியா | 01.09 a.m. | Anuradhapura<br>அனுராதபுரம் | 00.09 a.m. |
| 5 | Jaffna<br>யாழ்ப்பாணம் | 03.55 a.m. | Colombo Fort<br>கொழும்பு கோட்டை | 04.45 a.m. |
| 6 | Kankesanthurai<br>காங்கேசன்துறை | 04.24 a.m. | Moratuwa<br>மொறட்டுவ | 05.25 a.m. |

யாழ்ப்பாணம் நகரிடை புகையிரதமானது (Intercity) இருக்கை முன்பதிவு வசதியுடன் கூடிய 09 குளிரூட்டப்பட்ட முதல் வகுப்பு பெட்டிகளைக் கொண்டுள்ளது. யாழ் தேவி புகையிரதத்தில் 02 குளிரூட்டப்பட்ட முதல் வகுப்பு பெட்டிகளும், இரவு நேர தபால் புகையிரதத்தில் 04 குளிரூட்டப்பட்ட முதல் வகுப்பு பெட்டிகளும் மற்றும் 02 இரண்டாம் வகுப்பு முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகளைக் கொண்ட பெட்டிகளும் இணைக்கப்பட்டுள்ளன. https://seatreservation.railway.gov.lk என்ற இணையத்தள இணைப்பின் ஊடாகவோ அல்லது இருக்கை முன்பதிவு வசதி கொண்ட புகையிரத நிலையங்களுக்குச் சென்றோ இப்புகையிரதங்களுக்கான இருக்கைகளை முன்பதிவு செய்துகொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்ட புகையிரத சேவைகள் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஜி.டி.ஏ. சமரசிங்க
அத்தியட்சகர் (போக்குவரத்து)
புகையிரத பொது முகாமையாளருக்காக